**முதன்மை சார்பு நீதிமன்றம், கரூர்.**

**முன்னிலை:திருமதி.K.L.பிரியங்கா, B.A., B.L., (Hons)**

முதன்மை சார்பு நீதிபதி, கரூர்.

திருவள்ளுவராண்டு 2056 ஸ்ரீ பராபவ வருடம், ஆனி மாதம் 08 ம் நாள்

2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22 ஆம் நாள் திங்கட்கிழமை

**அசல் வழக்கு எண்.133/2026**

**CNR.No. TNKR03-0010116-2026**

R. ராமசாமி.த/பெ. ராசப்ப கவுண்டர்,வயது 69, கதவு எண்.1/128-9, ராம் நகர் வடக்கு, சேலம் பைபாஸ் ரோடு,ஆண்டான் கோவில் கிழக்கு கிராமம், மண்மங்கலம் தாலுக்கா, கரூர் மாவட்டம். ...வாதி

**//எதிர்//**

சுகுமார்(எ)சுகுமாரன், த/பெ.ராமசாமி, வயது51, வசிப்பிடம் கதவு எண் . 3/2 , வளையல்கார தெரு, கரூர் டவுன்-639 001, கரூர் தாலுக்கா, கரூர் மாவட்டம்.

...பிரதிவாதி

**தீர்ப்புரை**

இவ்வழக்கில், வாதி கடந்த 06.12.2025 தேதியிட்ட தாவா கிரைய ஒப்பந்த பத்திரம்படி ஏற்றுகை ஆற்றுதல் பரிகாரம்கோரி இவ்வழக்கு தாக்கல்.

தாவா தாக்கல் செய்த நாட்கள் : 20.,02.2026

அதிகார வரம்பிற்கும் நீதிமன்ற கட்டணத்திற்குமான தாவாவின் மதிப்பு ரூ.3,00,000/-

நீதிமன்ற கட்டணம் தமிழ்நாடு நீதிமன்ற கட்டணச்சட்டம் பிரிவு 22 ன் கீழ் ரூ.9,000/- செலுத்தப்பட்டுள்ளது.

வழக்கிற்கான வியாஜ்ஜிய மூலம் 06.12.2025 கரூர் தாலுக்கா, கரூர் மாவட்டம் இந்நீதிமன்ற எல்லைக்குள் அமைந்துள்ளது.

**DETAILS OF VALUATION**

For the relief of Specific Performance, the
total Value of the Suit Properties is ....Rs.3,00,000/-
The Court Fee payable Under Section 42 of Court Fee Act is ....Rs.9,000/-

இந்த வழக்கு கடந்த 11.06.2026 அன்று இறுதியாக என் முன்பாக விசாரணைக்காக வந்த போது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.வெங்கடேஸ்வரன் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. பிரதீப் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய பரிசீலனையில் இருந்து வந்ததில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**தீர்ப்பாணை**

1. வாதியின் தாவாவை அனுமதித்து தாவா சொத்தைப் பொருத்து நல இளப்பம் கண்டு மூன்று சம பாகங்களாகப் பிரித்து அதில் ஒரு பாகத்தை வாதிக்கு ஒதுக்கி பாகப்பிரிவினைக்கான முதல்நிலை தீர்ப்பாணை பரிகாரம் வழங்கியும், தாவா சொத்துக்களைப் பொறுத்து இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கும் வரை பிரதிவாதிகள் எவ்வித வில்லங்கமும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும் தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை. இறுதிநிலை தீர்ப்பாணைக்காக இரு தரப்பினரும் ஆஜராக உத்திரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க வாய்தா 23.01.2026.

2) இத்தாவா செலவுத் தொகையினை **ரூ.----------/-** யை பிரதிவாதி வாதிக்கு செலுத்த உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகைப் பட்டியல் தாக்கல் இல்லை.

| **செலவுத்தொகை பட்டியல்** | | **வாதி**<br>**ரூ.பை.** |
|---|---|---|
| நீதிமன்ற கட்டணம் | - | 0.00 |
| வக்காலத்து | - | 0.00 |
| கட்டளை செலவு | - | 0.00 |
| வழக்கறிஞர் ஊதியம் | - | 0.00 |
| **மொத்தம்** | - | 0.00 |

**<u>சொத்துவிபரம்:-</u>**

கரூர் பதிவு மாவட்டம் மேலக்கரூர் சார்பதிவகம், கரூர் வட்டம், இனாம் கரூர் கிராமம். பழைய சர்வே. 638-க்கு. புதிய சாவே. 440/1 நெ.ஏக். 14.62 செண்ட், இதில் தற்கால சப்டிவிஷன்படி தனிப்பட்டா எண் 5959-ல்

சர்வே. 440/1AA நெ.ஹெக்.0.05.00-க்கு ஏக். 0.12.35 செண்ட்

சர்வே. 440/1GG நெ.ஹெக்.0.03.00- க்கு ஏக்.0.07.41 செண்ட் .

சர்வே. 440/1N நெ.ஹெக். 0.02.00-கதி ஏக்.0.04.94 செண்ட் .

ஆக மொத்தம் ஹெக.0.10.00-க்கு ஏக். 0.24.70 செண்ட் இந்த விஸ்தீரணமுள்ள நிலம் பூராவும். இதற்கு சதுரடி 10764 சதுரடிக்கு, 1000 சதுரமீட்டர் (தற்காலம் அளந்து கண்டுள்ளபடி) ஆகும். பின்னும் மேற்படி காலை கிணற்றில் 16-ல் பங்கு (1/16)

பாத்தியமும், அதிலுள்ள 5HP ஆயில் எஞ்சின் பம்புசெட்டும், 16–ல் பங்கு (1:6) பாத்தியமும் அதனைச் சேர்ந்த தொட்டி, துலை, வாரி, வாய்க்கால் மாமூலபடி தடம் சகிதம்.மேற்படி சொத்தின் மதிப்பு ரூ.3,00,000/–

2026ம் ஆண்டு ஜுன் திங்கள் 22–ம் நாளிடப்பட்ட தீர்ப்பாணையில் இன்று என்னால் கையொப்பம் செய்யப்பட்டும் நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

K L PRIYANGA Digitally signed by K L PRIYANGA

**முதன்மை சார்பு நீதிபதி,**
**கரூர்.**